# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.25257/விசாரணை/09</u>

**<u>விசாரணை நாள் 29.01..2010 – இராமநாதபுரம்</u>**

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. எஸ். குமாரவேல்<br>பிளாட் நெ.61, 2/411, சாஸ்திரி நகர்<br>கடச்சனேந்தல்<br>மதுரை – 625 107. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகம்<br>4/467, அரசு தொழிற் பயிற்சி நிலையம்<br>மாணவர் விடுதி, மூன்றுமாவடி<br>மதுரை – 625 007. |

----------

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் இன்று (29.01.2010) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு. எஸ். குமாரவேல், பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு. கே. கதிர்வேல், மண்டல இணை இயக்குநர் (பயிற்சி), சென்னை மண்டல வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, மதுரை வந்திருந்தனர்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 25.07.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் துறை விசாரணை சம்பந்தமாக நான்கு இனங்களுக்கு தகவல்கள் வழங்குமாறு கோரியிருந்தார். பொதுத் தகவல் அலுவலர் 07.8.09 அன்று மனுதாரருக்கு எழுதிய கடிதத்தில், மனுதாரர் மீது விசாரணை நிலுவையில் உள்ளதால் மனுதாரர் கோரிய தகவல்களை வழங்க இயலவில்லை என்று தெரிவித்துள்ளார். பொதுத்

தகவல் அலுவலர் அளித்துள்ள தகவல்கள் சரியில்லை என்று கருதி மனுதாரர் 21.8.09 அன்று சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீடும், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 08.10.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடும் செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் இன்றைய விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது மனுதாரர் தான் கோரிய நான்கு இனங்களுக்கும் இதுகாறும் பொதுத் தகவல் அலுவலர் தகவல்கள் வழங்கவில்லை என்று இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். விசாரணைக்கு வந்திருந்த பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மீது விசாரணை நிலுவையில் உள்ளதாகவும், விசாரணை முடிந்தவுடன் மனுதாரர் கோரிய தகவல்களை முழுமையாகவும், சரியாகவும் வழங்குவதாக இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். ஆகவே, பொதுத் தகவல் அலுவலர் விசாரணை முடிந்தவுடன் மனுதாரர் கோரிய நான்கு இனங்களுக்கும் அரசு ஆவணங்களில் உள்ளபடி முழுமையான, சரியான தகவல்களை மனுதாரருக்கு வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், தகவல் வழங்கிய விபரத்தையும் இவ்வாணையத்திற்கு உடன் தெரிவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 09.2.2010
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவிப் பதிவாளர்.

<u>வழக்கு எண்.25257/09</u>
பொதுத் தகவல் அலுவலர்
மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகம்
4/467, அரசு தொழிற் பயிற்சி நிலையம்
மாணவர் விடுதி, மூன்றுமாவடி
மதுரை – 625 007.

திரு. எஸ். குமாரவேல்
பிளாட் நெ.61, 2/411, சாஸ்திரி நகர்
கடச்சனேந்தல்
மதுரை – 625 107.